Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12
விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 294

சனிக்கிழமை 16 செப்ரெம்பர் 2023

ஆவணி 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



கொக்குத்தொடுவாயில்

# மனிதப் புதைகுழியின் அகழ்வுகள் நிறுத்தம்

## ஒக்ரோபரில் மீண்டும் தொடரும்

## 17 எலும்புக்கூடுகள் மீட்பு!

முல்லைத்தீவு, செப்ரெம்பர் 16

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து 17 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் உள்ளிட்ட பல்வேறு தடயப்பொருள்கள் மீட்கப்பட்ட நிலையில், அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த இடைநிறுத்தம் தற்காலிகம்தான் என்றும், ஒக்ரோபரில் அடுத்தகட்ட அகழ்வுகள் மேற் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.** »11

## புதைகுழியின் உண்மைத்தன்மைகள் வெளிப்படாவிடில் பெரும் போராட்டம்

### ரவிகரன் எச்சரிக்கை

முல்லைத்தீவு, செப். 16

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியை முழுமையாக அகழ்ந்து, ஆய்வுசெய்யப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப்படவேண்டுமென வட மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு உண்மைகள் வெளிக்கொணரத் தவறினால் மக்கள் போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த »11

## பிள்ளையானிடமுள்ள பதவியைப் பறிக்குக!

### ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு, செப். 16

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சுயாதீன விசாரணையொன்று இடம்பெற வேண்டுமெனில் இராஜங்க அமைச்சர் பிள்ளையான் மற்றும் புலனாய்வுப் பிரிவு பிரதானி சுரேஷ் ஷாலே ஆகியோரின் பதவிகள் பறிக்கப்படவேண்டும் »11



தியாகத்தின் தீபம்

## திலீபனின் நினைவேந்தல் தாயகத்தில் பேரெழுச்சி!

கிளிநொச்சி, செப். 16

தமிழர்களின் உரிமைகளுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினை »11

ஐ.நா. தீர்மானங்களின்போது

## இலங்கைக்கு கியூபா தொடர்ந்தும் ஆதரவு!

### அந்தநாட்டு ஜனாதிபதி ரணிலிடம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 16

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், மனித உரிமைகள் விவகாரம் குறித்து முன்வைக்கப் »11



வவுனியா

## கருப்பணிச்சான்குளப் பகுதியில் பௌத்தர்களின் பூர்வீக மயானமாம்

### மீட்டுத் தருமாறு பிக்குகள் போராட்டம்

வவுனியா, செப். 16

வவுனியா கருப்பணிச்சான் குளப் பகுதியில் தங்களின் பூர்வீக மயானம் இருந்தது என்றும் அதை மீட்டுத்தருமாறும் கொக்குவெளிப் பகுதி சிங்கள மக்கள் பிக்குவின் தலைமையில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கருப்பணிச்சான் குளப்பகுதியில் உள்ள தனியார் காணியொன்றின் எல்லை அந்த மயானத்தை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ளது »11

இலங்கைக்கான

## இந்தியத் தூதுவராக சந்தோஷ் ஜா

கொழும்பு, செப். 16

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக சந்தோஷ் ஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக தற்போது »11

## யாசகி ஒருவரின் குழந்தை கடத்தல்!


### நல்லூரில் சம்பவம்

வவுனியா, செப். 16

நல்லூர் ஆலய வளாகத்தில் திருவிழாக் காலத்தில் யாசகம் எடுத்துவந்த பெண் ஒருவருடைய குழந்தை பிறிதொரு யாசகியால் கடத் »09

காணாமற்போன

## பொலிஸ் அலுவலர் சடலமாக மீட்பு!



கிளிநொச்சி, செப். 16

கிளிநொச்சி -புதுஐயன்குளப் பகுதியில் கசிப்புக் கும்பலைப் பிடிப்பதற்காக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் »09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு

## முருகன், நளினியை அனுப்பத் தீர்மானம்

சென்னை, செப். 16

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான முருகன், நளினி உள்ளிட்ட 4 பேரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்திய மத்திய அரசு பதில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், நளினி உட்பட 4 பேரை விடுவித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்ததையடுத்து, முருகனை திருச்சி அகதிகள் முகாமில் இருந்து விடுவித்து தன்னுடன் சேர்ந்து வாழ அனுமதிக்கக் கோரி நளினி வழக்குத் தொடர்ந்தார்.

4 பேரின் கடவுச்சீட்டு உள்ளிட்ட பயண ஆவணங்களைக் கோரி கடந்த டிசெம்பர் மாதத்தில் இந்தியாவுக்கான இலங்கைத் துணைத் தூதரகத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பயண ஆவணங்கள் கிடைத்தவுடன் 4 பேரும் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் மத்திய அரசு கூறியுள்ளது.

இதேவேளை - நளினி இந்தியப் பிரஜை என்பதுடன், அவரது கணவரான முருகன் இலங்கைப் பிரஜையாவார். இதையடுத்து நளினியுடன் சேர்ந்து வாழ அனுமதிக்கும் கோரிக்கைக்கு அமைய அவரையும் இலங்கை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - விடுதலையான முருகன் தன்னை இலங்கைக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுத்திருந்ததுடன், இலங்கையிலுள்ள அவரது தாயாரும் தனது மகனை மீண்டும் தன்னுடன் சேர்த்து வைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

அடுத்த வருடத்தில்

## முட்டை விலையில் தளர்வு பாலுற்பத்தி தன்னிறைவு!



கொழும்பு, செப். 16

நாட்டில் முட்டை மற்றும் கோழி இறைச்சி என்பவற்றின் விலை அடுத்த வருடம் முதல் குறைவடையும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தின் பின்னர் நாட்டில் முட்டை உற்பத்தி மேலும் அதிகரிக்கும். அடுத்த வருடம் முதல் முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை.

அதேவேளை பால் உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்கான குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அதன் கீழ், 2023 முதல் 2028 வரை தேசிய பால் கொள்கை என்ற ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-26)

## இரு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

**கொழும்பு, செப். 16**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் மேலும் இரு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவது தொடர்பில் எதிரணிகள் கலந்துரையாடி வருகின்றன.**

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர ஆகிய இருவருக்கு எதிராகவே தனித்தனியாக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் முன்வைக்கப்படவுள்ளன.

இவ்விரு அமைச்சுகளும் விவசாயிகள் உட்பட மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்துவரும் நிலையில், தேசிய சொத்து விற்பனை, முறையற்ற தீர்மானங்கள், விலைமனுக் கோரலில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் மோசடி உள்ளிட்ட காரணங்களை மையப்படுத்தியே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஒ-44)

கொடுப்பனவு வழங்குவதாக

## வயோதிபத் தம்பதியிடம் நூதனமாக பணமோசடி!

கொடிகாமம், செப். 16

பிரதேச செயலக உத்தியோகத்தர்களெனதம்மை அடையாளப்படுத்தி வயோதிப தம்பதியரிடம் பணமோசடியில் நால்வர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தென்மராட்சியில் கச்சாய் மகா வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

4 வருடங்களாக பாரிசவாத நோயால் பாதிக்கப்பட்ட வயோதிபர் தனது மனைவியுடன் கச்சாய் சந்திக்கு அருகில் வசித்து வருகின்றார்.

தென்மராட்சிப் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள் என தம்மை அடையாளப்படுத்தி வீட்டினுள் நுழைந்த குறித்த நபர்கள் உங்களுக்கு கொடுப்பனவு கிடைக்கவுள்ளது என்று கூறியுள்ளனர்.

இதற்கென 30 ஆயிரம் ரூபா பணம் செலுத்தப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பின்னர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து அவர்களிடம் கையெழுத்தைப் பெற்றனர். அப்போது வயோதிபர்கள் தாம் சிறுகச் சிறுக சேமித்து வைத்த 30 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கியுள்ளனர். மோசடி நபர்கள் அங்கிருந்த அலைபேசியையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-159)

## தாதியர் ஆட்சேர்ப்பு

கொழும்பு, செப். 16

தாதியர் கற்கைநெறியை நிறைவு செய்த ஆயிரம் தாதியர்களை உடனடியாக ஆட்சேர்த்துக் கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த ஆட்சேர்ப்பானது மிக விரைவில் செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தாதியர் கற்கைநெறியை நிறைவு செய்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு பணியமர்த்தப்படவுள்ளனர்.

தாதியர் பயிற்சி நெறிக்கு 3 ஆயிரத்து 500 மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் சுகாதார அமைச்சு தற்போது மேற்கொண்டுள்ளது.

அதற்கேற்ப, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து, நேற்று முதல் நாளைமறுதினம் வரை ஒன்லைன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களை வர்த்தமானி ஊடாகவும், சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.health.gov.lk ஐப் பார்வையிடுவதன் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-இ)

## காலியாகும் பெரமுன

கொழும்பு, செப். 16

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தொழிற்சங்கத் தலைவர்களில் பலர் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா உள்ளிட்டோர் தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியில் இணைய ஆரம்பித்துள்ளதாக அந்தக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவில் சுமார் 100 தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் சுமார் 25 தொழிற்சங்கங்களின் தலைவர்கள் புதிய அரசியல் கூட்டணியின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் நிமல் லன்சா ஆகியோரைச் சந்தித்து அந்தக் கூட்டணியில் இணைந்துள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அசங்க அண்மையில் புதிய அரசியல் கூட்டணியில் இணைந்து கொண்டார். (ஒ-இ)

## காணாமற்போன மீனவர் தமிழ்நாட்டில்

மன்னார், செப். 16

தலைமன்னாரிலிருந்து மீன்பிடிப்பதற்காக படகில் சென்று கரை திரும்பாத மீனவர்கள் இருவர் தமிழ்நாடு - கோடியாக்கரையில் நேற்றுமுன்தினம் கரைசேர்ந்துள்ளனர்.

மீனவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தலைமன்னார் கடற்கரையிலிருந்து வடகடலில் இரு மீனவர்கள் படகொன்றில் வலிச்சல் மூலம் மீன்பிடிக்காகச் சென்றிருந்தனர்.

அவர்கள் நேற்றுமுன்தினம் மாலை வரை கரை திரும்பவில்லை. அதனையடுத்து அந்தப் பகுதி மீனவர்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில் குறித்த இரண்டு மீனவர்களும் நேற்று வெள்ளிக்கிழமை தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்ட கோடியக்கரை கடற்பகுதியில் கரைசேர்ந்துள்ளனர்.

தமிழக மரைன் பொலிஸார் அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோடிலியா சொகுசுக் கப்பல்

# மூன்று மாதகாலத்தில் 6,000 சுற்றுலாவிகள்!

யாழ்ப்பாணம், செப். 16

**இந்தியாவிலிருந்து இலங்கைக்கான சொகுசுச் சுற்றுலாக் கப்பலான ஹோடிலியா கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டு 3 மாதங்களில் 6 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று யாழ். இந்தியத் துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.**



யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்தப் காலப்பகுதியிலுள்ள உள்ளூர் சமூகத்துக்கும் உதவிய துடன் தொழில்முனைவோருக்குப் புதிய வழிகளை வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

## மயங்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

நாவற்குழியில் உள்ள தனது பணியிடத்துக்கு பேருந்தில் வருகை தந்த ஒருவர் பேருந்தில் இருந்து இறங்கிய நிலையில் மயங்கி வீழ்ந்து நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையில் பணிபுரியும் மட்டுவில் பகுதியைச் சேர்ந்த மாணிக்கவாசகர் சதீஸ்குமார் (வயது -50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாரடைப்புக் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகமருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

(ஒ.ரி2-20-159-131)

# 'சதொச' புதைகுழி வழக்கு; நாட்குறிப்பேடு வழங்கவும்

## பதிவாளருக்கு மன்னார் மன்று கட்டளை

மன்னார், செப். 16

மன்னார் 'சதொச' மனிதப் புதைகுழி சம்பந்தமாக மேலதிகமாக என்ன செய்யவேண்டும் என்ற அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு, வழக்கின் நிகழ்ச்சிக் குறிப்புகளை அத்தாட்சிப்படுத்தி அகழ்வுக்குப் பொறுப்பான விசேட மருத்துவ நிபுணர் ராஜபக்சவிடம் வழங்குமாறு மன்னார் நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.

மன்னார் 'சதொச' மனிதப் புதைகுழி வழக்கு மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஏற்கனவே அகழ்வுக்குப் பொறுப்பான விசேட மருத்துவ நிபுணர் ராஜபக்சவிடம் மன்னார் 'சதொச' மனிதப் புதைகுழி சம்பந்தமாக மேலதிகமாக என்ன செய்ய வேண்டும் என்று அறிக்கையை நீதிமன்று கோரியிருந்தது.

இந்தநிலையில் "நீதிமன்ற நாட்குறிப்பேடுகள் தனக்குக் கிடைக்கவில்லை. அது சம்பந்தமான அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றை வழங்குங்கள்" என்று விசேட மருத்துவ நிபுணர் ராஜபக்ச மன்றில் கோரிக்கை முன்வைத்தார்.

அதற்கமைய நீதிமன்ற வழக்கு நிகழ்ச்சிக் குறிப்புகளை அத்தாட்சிப்படுத்தி விசேட மருத்துவ நிபுணர் ராஜபக்சவுக்கு வழங்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு மன்று கட்டளைப் பிறப்பித்தது. வழக்கு எதிர்வரும் நவம்பர் 8ஆம் திகதி தவணையிடப்படுகிறது என்று நீதிவான் அறிவித்தார். (ச-60)

கேதீச்சர புதைகுழி மாதிரிகள்

# விலைமனுக் கோரலின் பின் அமெ.வில் பரிசோதனை!

மன்னார், செப். 16

மன்னார் திருக்கேதீஸ்வர மனிதப் புதைக்குழியில் அகழ்வு செய்யப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகள் காபன் பரிசோதனைக்காக அனுப்புவதற்கான விலைமனுக் கோரல் முற்றுப்பெறாத நிலையில், அது பூர்த்தியான பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் என்று காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி வீ.எஸ். நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

திருக்கேதீஸ்வர மனிதப் புதைகுழி வழக்கு மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி கே.எல்.எம்.சாஜித் முன்னிலையில் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின்போது "அரச சட்டத்தரணியால் காபன் பரிசோதனைக்கான விலைமனுக் கோரல் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது. அது பெற்றுக்கொண்ட பின்பே தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளை அமெரிக்காவுக்குப் பரிசோதனைக்கு அனுப்புவது தொடர்பாக முடிவு எடுக்கப்படும்.

இதற்கான நிதி வழங்கலைத் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்" என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக முன்னிலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரணி வீ.எஸ். நிரஞ்சன் தெரிவித்தார்.

அதற்கமைய இந்த விலைமனுவைப் பெற்று மேலதிக நடவடிக்கைக்காக வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது. (ச-60)





**விரும்பியோ விரும்பாமலோ இண்டைக்கும் நல்லூரைப்பற்றித்தான் கதைக்கவேண்டியிருக்கு. இந்தமுறை வழக்கத்தை விட நல்லூர்த் திருவிழாவுக்குச் சனம் கூட எண்டது அங்கபோன ஆக்களுக்குத் தெரியும். அதால வழக்கமா காத்துவாங்கிக் கொண்டிருக்கிற 'சைக்கிள் பார்க்' எல்லாம் இந்தமுறை எந்த நேரமும் நிரம்பி வழிஞ்சபடி இருந்திச்சு. திருவிழாவின்ர கடைசி பத்துநாளும் 'சைக்கிள் பார்க்' எல்லாம் ஹவுஸ்புல்லாகி, 'இஞ்ச இடமில்லை' எண்டு மோட்டார் சைக்கிள்களையும், கார்களையும் திருப்பியனுப்பிற நிலைமை. அதால கனசனங்கள் திரும்பிப்போய் தூரத்தில எங்கையும் வீடுகளிலையோ இல்லாட்டி றோட் சைட்டிலையோ தங்கட வாகனங்களை விட்டிட்டுத்தான் கோயிலுக்குப் போனவை.**

**இப்பிடி இந்தமுறை நல்ல உழைப்பு இருந்தும், 'பார்க்' போட்டவை அதுக்குள்ளையும் எப்பிடி குறுக்குவழி லாபம் பாக்கலாம் எண்டு யோசிச்சிருக்கினம். திருவிழாவின்ர கடைசி பத்துநாளும் சனம் அள்ளு கொள்ளையா வருமெண்டது 'பார்க்' காரருக்கும் தெரியும். அதால முதல் பதினைஞ்சு நாளும் முனிசிபல்காரர் சொன்னபடி, ரிக்கெற்றில அடிச்ச காசைத்தான் எடுத்தவை. சைக்கிளுக்கு 20 ரூபா, மோட்டார் சைக்கிளுக்கு 30 ரூபா, ஓட்டோவுக்கு 50 ரூபா, மற்ற வாகனங்களுக்கு 100 ரூபா எண்டதுதான் முனிசிபல் போட்ட ரேட். அதின்படிதான் ரிக்கெற்று அடிச்சு, பார்க்கில விடுகிற வாகனங்களுக்கும் குடுத்தவை. பிறகு அவைக்குள்ள காசுக் காட்டேறி பூந்திருக்க வேணும். ரிக்கெற்றில அடிச்ச ரேட்டை வெட்டிப் போட்டு, ஒவ்வொரு பார்க்காரரும் ஒவ்வொரு ரேட் எடுக்கத் தொடங்கிட்டினம். அண்ணை நேற்று பைக் விட்டத்துக்கு 30 ரூபா தானே எடுத்தனியள்? இண்டைக்கு என்ன அம்பது ரூபா எடுக்கிறியள்?' எண்டு கேட்டால், 'அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. இப்ப சாமான் விலையேறுற மாதிரி இதுவும் திடீரெண்டு ஏறிட்டுது. முனிசிபல் தான் இப்பிடி காசு வாங்கச் சொல்லிக் கடிதம் அனுப்பியிருக்கு' எண்டு பந்தை முனிசிபல் பக்கம் திருப்பிப் போட்டு, அவை தங்கட இஷ்டப்படி சனத்திட்ட காசை வறுகத் தொடங்கிட்டினம்.**

**இதைத் தனிய 'பார்க்'காரர் செய்த அநியாயம் எண்டு சொல்லேலாது. ஏனெண்டால் இப்பிடி 'பார்க்'காரர் கண்டபடி காசெடுக்கினம் எண்டது முனிசிபல் காரருக்கும் தெரியும். கனபேர் அவைக்கு கோல் எடுத்தும் கொம்ப்ளைண்ட் பண்ணினவை. அப்பிடியிருந்தும் எந்த நடவடிக்கையும் இல்லாட்டி, முனிசிபலும் உதுக்குத் துணை நிக்குது எண்டுதானே அர்த்தம். திருவிழாவில குத்தகைக் கடையளிட்ட காசை வாங்கவும், வேற ஆரும் குத்தகை தராமல் களவாக் கடை போட்டவையோ எண்டு பாக்கவும் இருபத்து நாலு மணித்தியாலமும் கண்ணுக்க எண்ணெயை விட்டுக்கொண்டு திரியத் தெரிஞ்ச முனிசிபல்காரருக்கு, கண்ணுக்கு முன்னால நடந்த இந்த மோசடியைத் தடுக்க ஏலாதோ? சரி, நடந்தது நடந்திட்டு. அடுத்த வருசமாவது இப்பிடியான பிழையள் நடக்காமல் அவையள் பாக்கவேணும்.**



- பட்சி

padsi@uthayen.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையிலிருந்து மீட்சி

## தாமாக முன்வந்தனர் யாழ். இளைஞர்கள்!

யாழ்ப்பாணம், செப். 16

போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடுவதற்கு தாமாக முன்வந்த யாழ். இளைஞர்கள் 10 பேர் மறுவாழ்வுக்காக தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகாரசபையின் நிட்டம்புவ சிகிச்சை மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

21 முதல் 32 வயதுக்குட்பட்ட இளைஞர்களே மறுவாழ்வு சிகிச்சைக்காக தாமாக முன்வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-125)

# விநாயகர் சதுர்த்தி

யாழ்ப்பாணம், செப். 16

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிறப்பு பூசைகளைத் தொடர்ந்து விநாயகப்பெருமான் வீதிவலம் வருவார் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-இ)

# விநாயகர் சதுர்த்தி பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், செப். 16

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு சிறப்பு பூசைகள் ஆரம்பமாகி 1008 சங்காபிஷேகமும் இடம்பெறும்.

நண்பகல் 12 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார்.

தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-17)

# இலங்கையின் முதலாவது பாடசாலை அருங்காட்சியகம்

## யாழ்.இந்துக் கல்லூரியில் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். இந்துக் கல்லூரியின் அருங்காட்சியகத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது.

யாழ். இந்துக் கல்லூரியின் பிரித்தானியக் கிளைப் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் கல்லூரி மரபுரிமைக் கழக நிர்வாகத்தினருக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வும், அருங்காட்சியகத்துக்குப் பொருள்களை வழங்கி உதவிய கல்லூரியின் பழைய மாணவர்கள் மூவருக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அருங்காட்சியக உருவாக்கத்தில் முன்னின்று செயற்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் சிறப்புரை ஆற்றினார்.

யாழ்.இந்துக் கிளைப் பழைய மாணவர் சங்கத்தின் 2.7 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பிலேயே குறித்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் முதன்முதலாக யாழ்.இந்துக் கல்லூரியிலேயே அரும்பொருட் காட்சியகம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி3-66)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 16

கந்தரோடை கோட்டன்கட்டு அருள்மிகு ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 10 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு இன்று சனிக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு, விசேட திரவிய ஹோமம், யாக தீபாராதனை, வேத ஸ்தோத்திர பாராயணம் என்பன இடம்பெறவுள்ளன என்று ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகளில் யோசித்து ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். சுபச் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்புண்டு. சங்கடங்கள் ஏற்படும். விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** அதிகரிக்கும் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். சகோதர வகையில் சில சங்கடங்களை எதிர்கொள்ள நேரிடும். ஏற்பட்டிருந்த மன வருத்தங்கள் நீங்கும். உழைக்க வேண்டி வரும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். புதியமுயற்சிகளைத்தவிர்க்கவும். இலாபம் சுமாராகத்தான் இருக்கும். பணியாளர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**மகரம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். ஆதாயம் ஏற்படக்கூடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்.

# கல்விசார் தொழில் வழிகாட்டல் செயலமர்வு அக்கராயன் ம.வி.யில்

கிளிநொச்சி, செப் 16

கிளிநொச்சி மாவட்டச் செயலக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் அக்கராயன் மகா வித்தியாலய கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கான கல்விசார் தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் மூன்று பிரிவுகளாக முன்னெடுக்கப்பட்டன.

செயலமர்வின்போது உயர்தர பாடத்தெரிவு முறைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் கல்வி சார்ந்த தொழில் வழிகாட்டல்கள் தொடர்பான விடயங்கள், தொழிலுக்கான திறவுகோல் ஆய்வினூடாக தனித்தனியாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன.

மேலும் மாணவர்களுக்கான செயலமர்வு ஸ்மார்ட் வகுப்பறையில் இடம்பெற்றது.

இதன்போது கல்வி அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள், மாணவர்கள் வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கான திறன்கள் மற்றும் தொழில் தகைமைகள், மாணவர்களின் எதிர்காலம் நோக்கிய வளமான வாழ்க்கை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதனைவிட மாணவர்கள் தமக்கான தொழில் வாய்ப்புக்களை பெற முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள், பாடசாலைக் கல்வியின் பின் முன்னெடுக்கக் கூடிய கற்கைகள், வருமானம் ஈட்டும் தொழில்நுட்பக் கற்கைகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

மேலும் உயர் கல்வி வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளத் தேவையான கல்வி சார்ந்த தொழில் வழிகாட்டல்கள், பல்கலைக்கழக வாய்ப்புகள், பரீட்சைக்குப் பின்னரான கல்வியியற் கல்லூரிக்கான வாய்ப்புகள், போட்டிப் பரீட்சைகளுக்கு முகம் கொடுத்து தொழிலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் தொடர்பாக மாணவர்கள் தெளிவு படுத்தப்பட்டனர். (ஒ-ரி2-113)

# தெய்வீக சுகானுபவம்

யாழ்ப்பாணம், செப். 16

வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தினர் இணைந்து நடத்திய தெய்வீக சுகானுபவம்- 9 நிகழ்வானது கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மாநகரசபை ஆணையாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஏனைய திணைக்களப் பணிப்பாளர்கள், கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து சிறப்பித்திருந்தனர். (ஒ-ரி2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எல்லாமே அரசியல் ஆதாயம்

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதில் அதே ஆண்டிலிருந்து தீவிரம் காட்டத் தொடங்கினர். ராஜபக்ச சகோதரர்களில் யாராவது ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்தி வெற்றி பெற வைப்பதற்கு கடுமையாக உழைத்தனர். கோத்தாபய ராஜபக்ச என்ற முகத்துக்கு தென்னிலங்கையில் கணிசமான வாக்குகள் கிடைக்கும் என்று நம்பிய சூழ்நிலையில், விடுதலைப் புலிகளுடனான போரை முடிவுறுத்தியதில் கணிசமான பங்கு வகித்தவர் என்ற அடிப்படையில், நாட்டின் பாதுகாப்பை அவர் மீட்டெடுப்பார் என்று இலங்கையை முழுமையாக நம்ப வைக்கவேண்டிய தேவையிருந்தது. இந்தச் சூழலிலேயே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தத் தாக்குதல் ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக அவர்களின் ஏற்பாட்டில் இராணுவ புலனாய்வுப் பிரிவால் நடத்தப்பட்டது என்பதை 'சனல் – 4' தொலைக்காட்சி தனது அண்மைய ஆவணப் படத்தில் வெளிப்படுத்தியுள்ளது.

'சனல் – 4' ஆவணப்படம் வெளியானது முதல் தென்னிலங்கையில் பல தரப்புகளும் இது தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்பதையே வலியுறுத்தி வருகின்றன. கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆளும் கட்சி அமைச்சர்கள், சிறிலங்கா பொதுஜன பெரமுன என்று தென்னிலங்கை முழுதுமே ஒரு பொதுப்புள்ளியில் நின்று சர்வதேச விசாரணையை வலியுறுத்துகின்றது. 2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போது நிகழ்ந்த போர்க்குற்றங்கள், சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கோரிக்கையை நடப்பு ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரிலும் மறுத்துள்ள இலங்கை அரசாங்கம், 'சனல் – 4' தொடர்பில் மாத்திரம் சர்வதேச விசாரணையைக் கோருகின்றது.

தென்னிலங்கை இந்த விடயத்தில் மாத்திரம் சர்வதேச விசாரணை கோருவது ஒன்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு அல்ல. அந்த எண்ணம் அவர்களிடம் துளியும் இல்லை. ஈஸ்டர் தாக்குதலைப் பயன்படுத்தி எப்படி ஆட்சியைப் பிடித்தார்களோ அதேபோன்று இந்தத் தாக்குதல் தொடர்பில் தற்போது வெளிவந்துள்ள காணொலியைப் பயன்படுத்தி அரசியலை நகர்த்தி மற்றொரு தரப்பு ஆட்சியைப் பிடிப்பதற்காகவே சர்வதேச விசாரணையைக் கோருகின்றது. தென்னிலங்கையின் ஒவ்வொரு தரப்பும் சர்வதேச விசாரணையைக் கோருவதன் பின்னால் முழுக்க முழுக்க அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலே காரணமாக இருக்கிறது. இவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு இந்தக் கோரிக்கையை முன்வைக்கவில்லை என்பது பட்டவர்த்தனம்.


நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற காலத்தில் இந்தத் தாக்குதல் நடந்தது. அப்போது நாடாளுமன்றத் தெரிவுக் குழு, ஜனாதிபதி ஆணைக்குழு எல்லாம் இது தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்டன. நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதிப் பரிந்துரையில், ஈஸ்டர் தாக்குதலால் அரசியல் ஆதாயம் அடைந்த தரப்புகளுக்கும் இந்தத் தாக்குதலுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தை வெளிப்படுத்தியதுடன் அது தொடர்பில் முழுமையான விசாரணை அவசியம் என்றும் குறிப்பிட்டிருந்தது. அதையொட்டி அப்போதைய நல்லாட்சி அரசோ சரி, அதன் பின்னர் பதவிக்கு வந்த ராஜபக்ச அரசோ சரி, விசாரணையை முன்னெடுக்கவில்லை. மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்ற உளமார்ந்த எண்ணம் இந்தத் தரப்புகளுக்கு இருந்திருந்தால் இவர்கள் அப்போதே இந்த விசாரணைகளை தொடங்கியிருப்பர். 'சனல் – 4' காணொலி வரும் வரையில் காத்திருக்கவேண்டியதில்லை.

**ராஜபக்சக்கள் ஆட்சியைப் பிடிக்க ஈஸ்டர் தாக்குதல் நடத்தினர் என்றால், அதைவைத்து ஆட்சியைப் பிடிக்க விசாரணைக் கோரிக்கையை ஏனைய கட்சிகள் கோருகின்றன. அரசியல் ஆதாயத்துக்காக நடத்தப்படும் எந்தவொரு விசாரணையும் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தராது.**

### நாளொரு நல்வார்த்தை

நம்மைத் திருத்துவதற்கு ஒருவர் தேவையில்லை,
ஆனால் நம்மை நாம் திருத்திக் கொள்ளும்போது
சில சமயங்களில், நம்மை நேசிக்க ஒருவர் தேவைப்படுகிறார்.

- ஜூலியோ கோர்த்தெசார் -




# ஈஸ்டர் தாக்குதல் தகவல்கள் ரணிலாலும் மூடிமறைப்பாம்!

## சஜித்தின் குற்றச்சாட்டு இது

கொழும்பு, செப். 16

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் உண்மை கண்டறியப்படும் எனக்கூறி ஆட்சிக்குவந்த முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தகவல்களை மூடிமறைக்கும் முயற்சியிலேயே இறங்கினார். தற்போதைய ஜனாதிபதியும் அதேவழியில்தான் பயணிக்கின்றார் என குற்றஞ்சாட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கையை அரசிடம் கேட்டபோது, வழங்க முடியாது எனக் கூறப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பின்பற்றியது போலவே, இரகசியங்கள் மறைந்திருக்கும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பாகங்களை எதிர்க்கட்சித் தலைவருக்குக் கூட கிடைக்காத வகையில் தற்போதைய ஜனாதிபதியும் மறைத்துள்ளார்.

இரகசியமான மற்றும் உணர்ச்சிகரமான விடயங்கள் என்று கூறி தற்போதைய ஜனாதிபதியும் உண்மையை மறைத்து வருகின்றார், மக்களைப் போலவே எதிர்க்கட்சித் தலைவரால் கூட வாசிக்க முடியாத வகையில் அறிக்கைகள் மறைக்கப்பட்டுள்ளன. இது எதிர்க்கட்சித் தலைவரின் நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயலாகும் - என்றார். (ஒ-44)

## மூன்றெழுத்துக்காரரே ஜனாதிபதி வேட்பாளர்

மூன்றெழுத்துடையவரே மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர். இன்னும் ஒன்றரை மாதமளவில் அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்கக்கூடியதாக இருக்கும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார். ஊடக சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

'தங்கத்துக்கு ஏன் அதிக விலை? மாணிக்கம், முத்துகளுக்கு ஏன் மதிப்பு? அவை வீதியில் கொட்டிக் கிடந்தால் கருங்கல்லுக்குரிய மதிப்பே கிட்டும். மொட்டுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரும் பெறுமதி மிக்கவர். பதற்றப்பட வேண்டாம். உரிய நேரத்தில் அறிவிப்புவரும். அரசியலில் 'நிராகரிப்பு' என்பது நிரந்தரம் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பயணம் இதற்கு சிறந்த சான்று - என்றார். (ஒ-44)

## அரசியலுக்கு இனி வரமாட்டேன்

### கோத்தா உறுதிபடத் தெரிவிப்பு

தான் மீண்டும் அரசியலுக்கு வரவுள்ளதாக வெளியாகும் தகவல்களை முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நிராகரித்துள்ளார்.

கோத்தாபய ராஜபக்ச மீண்டும் அரசியலுக்குள் வரவுள்ளார் என்ற தகவல்கள் தெற்கு அரசியலில் பேசுபொருளாக மாறியுள்ளது. இந்த நிலையில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரை நேரில் சந்தித்து, இது பற்றி வினவியுள்ளனர்.

'அரசியலுக்கு ஒரு தடவை வந்தேன், ஒதுங்கினேன். அதிகாரத்தை தக்கவைக்க வேண்டும் என்பது அல்ல என் நோக்கம். மீண்டும் அரசியலுக்கு வரும் அளவுக்கு வாழ்க்கையில் பக்குவம் இல்லாத நபர் நான் அல்லன்,' எனக் குறிப்பிட்டுள்ளார். (ஒ-44)

**நாளை** 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை ஆவணி 31

சுபநேரம் : 09.03 – 10.33
ராகுகாலம் : 04.33 – 06.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓசோன் படையைப் பாதுகாப்போம் காலநிலை மாற்றத்தைக் குறைப்போம்

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா
முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இன்று உலக ஓசோன் தினம். பூமியின் உயிரின வாழ்வின் நிலைத்திருப்புக்கு அவசியமான பணிகளைச் செய்வதில் வளிமண்டலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

### 2023 இன் ஓசோன் பாதுகாப்புத் தின தொனிப்பொருள்

இவ்வாண்டு ஓசோன் தினமானது 'ஓசோன் படையைப் பாதுகாப்பதுடன் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளையும் குறைத்தல்' என்ற தொனிப்பொருளில் உலகம் முழுவதிலும் கொண்டாடப்படுகின்றது. ஓசோன் என்பது மூன்று ஒட்சிசன் மூலக்கூறுகளால் ஆன ஒன்றாகும். வளிமண்டலம் அவற்றின் குத்தான கட்டமைப்பில் மாறன் மண்டலம், படைமண்டலம், இடைமண்டலம் அயன மண்டலம் வெப்ப மண்டலம் மற்றும் புறமண்டலம் எனப் பிரிக்கப்பட்டுக் காணப்படுகிறது. மாறன் மண்டலம் பூமியின் மேற்பரப்போடு தொடர்புடைய ஒரு படையாகும். அது போன்று புறமண்டலம் என்பது பூமியின் மேற்பரப்பிலிருந்து மிகத் தொலைவாக வான்வெளிக்கு அண்மித்திருக்கின்ற படையாகும். இதற்குள் இருக்கின்ற ஒவ்வொரு படைகளும் அவற்றின் வெப்ப அமுக்க வேறுபாடுகளுக்கு ஏற்ப சூரியனின் பாதிப்புகள் நிறைந்த கதிர்வீச்சுகளில் இருந்து பூமியின் மேற்பரப்பைப் பாதுகாப்பதில் பல்வேறு வகைப்பட்ட பங்களிப்புகளைச் செய்கின்றன. அந்த அடிப்படையில் படை மண்டலத்தில் பூமியின் மேற்பரப்பில் இருந்து 15 தொடக்கம் 30 கிலோமீற்றர் இடைப்பட்ட உயரப் பகுதியில் அமைந்திருக்கின்ற ஓசோன் மண்டலம் சூரியனில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களை உறிஞ்சி பூமியின் பாதுகாப்புக்கு உதவுகின்றது.

### ஓசோன் படையின் செயற்பாடு

சூரியனின் கதிர்வீச்சுகள் யாவற்றையும் பூமியின் மேற்பரப்புப் பெறுவதில்லை. சூரியனின் கதிர்வீச்சுகள் முழுவதையும் அவ்வாறே பூமியின் மேற்பரப்புப் பெற்றுக் கொண்டால் பூமியில் மனிதன் மட்டுமின்றி ஏனைய உயிரினங்களும் வாழ முடியாத சூழலே ஏற்படும். சில வகையான கதிர்வீச்சுகளைக் குறிப்பாக புற ஊதா கதிர்கள் (Ultra Violet), அகச்சிவப்பு கதிர்கள் (Infrared), கம்மா கதிர்கள் (Gamma Rays), நுண்ணலைக் கதிர்கள்(Micro wave) மற்றும் எக்ஸ்ரே கதிர்கள் (X-rays) போன்றவற்றில் உயிரினங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற அல்லது பூமியின் மேற்பரப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற கதிர்வீச்சுகளை முழுமையாக பூமியினுடைய வளி மண்டலம் அனுமதிப்பதில்லை. இந்த வளிமண்டலம் சூரியகதிர் வீச்சுகளை முழுமையாகப் பூமியின் மேற்பரப்புப் பெற்றுக் கொள்ளாத வகையில் சில வகையான கதிர்வீச்சுகளைத் தடுத்தும், சிலவற்றை உறிஞ்சியும் பூமியினுடைய வளிமண்டலம் பூமிக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக இயங்குகின்றது. அவற்றில் மிக முக்கியமான செயற்பாடாக புற ஊதாக் கதிர் வீச்சினை (வகை B) ஓசோன் மண்டலம் உறிஞ்சி பூமியைப் பாதுகாக்கின்றது. புற ஊதாக் கதிர்கள் என்பவை பூமியின் மேற்பரப்பில் இருக்கின்ற மனிதன் உட்பட்ட உயிரினங்களின் தோல் புற்று நோய்க்கும் கண் புற்றுநோய்க்கும், நோய் எதிர்ப்பு மண்டலக் குறைவுக்கும் மற்றும் மனிதன் உட்பட்ட உயிரினங்களின் மரபணு சேதத்துக்கும் மிகப் பிரதானமான காரணியாக இருக்கின்றது. அத்தோடு விவசாய விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற அல்லது குறைக்கின்ற ஒரு செயற்பாட்டையும் இந்த புற ஊதாக் கதிர்கள் மேற்கொள்கின்றன. எனவே அவற்றிலிருந்து பூமியைப் பாதுகாப்பதில் ஓசோன் படை மிகப் பெரிய பங்கை வகிக்கின்றது.

### ஓசோனில் பாதிப்பு

மனிதனுடைய பல்வேறு வகைப்பட்ட செயற்பாடுகளின் விளைவாக ஓசோன் மண்டலமானது பாதிக்கப்பட்டு வருவதாக 1974ஆம் ஆண்டு இரசாயனவியலாளர்களான மரியோ மொலினா மற்றும் பிராங்க் சேர்வூட் ரோலண்ட் என்பவர்களால் கண்டறியப்பட்டது. குளோரோபுளோரோகாபனுக்கும் ஓசோன் படைத் தேய்வுக்குமிடையிலான தொடர்பு கண்டறியப்பட்டு ஓசோன் படையில் துவாரம் இருப்பதைக் கண்டறிந்தார்கள். அதற்குப் பின்னர் 1985ஆம் ஆண்டு பிரித்தானியாவின் புவிப்பௌதீகவியலாளரான ஜோ பர்மன் என்பவர் வளிமண்டலவியலாளர்களான பிரையன் ஜி கார்டினர் என்பவருடனும் ஜோன் சங்கிலின் என்பவருடனும் இணைந்து அந்தாட்டிக் கண்டத்துக்கு மேலாக ஓசோன் படையில் மிகப்பெரிய துவாரம் ஏற்பட்டுள்ளதாகக் கண்டறிந்தார்கள். அதன் பின்னர் 1985 ஆம் ஆண்டு வியன்னா மாநாட்டில் ஓசோன் படையை பாதுகாப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்தத் தீர்மானம் உலகின் பல நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் 1987 ஆம் ஆண்டு கனடாவின் மொன்றியல் நகரில் இடம்பெற்ற மாநாட்டில் உலகம் முழுவதிலும் ஓசோன் படையின் தேய்வுக்கு குளோரோ புளோரோகாபனின் செயற்பாடு காரணம் என ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் ஓசோனைப் பாதுகாப்பதற்கான செயற்றிட்டங்களையும் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஓசோன் படையும் காலநிலை மாற்றமும் உலகம் எதிர்கொள்ளுகின்ற காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளைத் தணிப்பதற்காக நாம் ஓசோன் படையைப் பாதுகாக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டு ஓசோன் தினம் கொண்டாடப்படுகின்றது. பச்சை வீட்டு வாயுக்களின் வெப்ப அதிகரிப்பு அல்லது அவை கொண்டிருக்கின்ற வெப்ப அளவைத் தீர்மானிப்பதில் சூரியனுடைய கதிர்வீச்சைகளுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. புற ஊதாக் கதிர்வீச்சு பூமியின் மேற்பரப்பை அடைகின்ற பொழுது பூமியினுடைய வெப்பம் அதிகரிக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது. காலநிலை மாற்றத்துக்கும் மானிட காரணிகள் எவ்வாறு மிகப்பெரிய அளவு பங்களிப்பை வழங்குகின்ற அதேவேளை இயற்கைக் காரணிகளும் குறிப்பிட்ட அளவுக்குக் காரணமாக இருக்கின்றன. சூரிய கதிர்வீசலின் வேறுபாடுகளும் பூமி தோற்றம் பெற்ற காலத்திலிருந்து காலநிலை மாற்றத்துக்கு பங்களிப்புச் செய்கின்றன.



ஓசோன் படையின் பாதுகாப்பு முழுமையாக இருக்கின்றபோதே சூரியக் கதிர்வீசல் காலநிலை மாற்றத்துக்குக் காரணமாக குறிப்பிட்ட அளவில் பங்களிக்கின்றது. ஓசோனின் செயற்பாடு பாதிக்கப்பட்டால் சூரியக் கதிர்வீசலால் நிகழும் காலநிலை மாற்றச் செயற்பாடு அதிகரிக்கும். அதனால்தான் இவ்வாண்டு சர்வதேச ஓசோன் தினம் காலநிலை மாற்றத்தினுடைய பாதிப்பின் அளவுகளைக் குறைப்பதற்காக ஓசோன் படையைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் கொண்டாடப்படுகின்றது.

இன்று காலநிலை மாற்றப் பாதிப்புகளை நாம் அதிகளவு எதிர்கொள்கின்ற சூழ்நிலையே காணப்படுகின்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 'எல்நினோ' வானிலை தோற்றப்பாட்டின் காரணமாக இவ்வாண்டு சராசரி மழைவீழ்ச்சியை விடவும் குறைவான மழைவீழ்ச்சியே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாண்டு மிக நீண்ட நாள்களாக நிலவுகின்ற மழையற்ற வரண்ட வானிலை காரணமாக தமிழர் தாயகப் பகுதிகள் பல்வேறு வகையான பாதிப்புகளை எதிர்கொண்டிருக்கின்றன. பல பிரதேசங்களில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்ற அதேவேளை விவசாய நடவடிக்கைகளுக்குப் போதிய அளவு நீரின்றி பல விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளைக் கைவிடுகின்ற சூழ்நிலையை அவதானிக்க முடிகின்றது. மேலும் இவ்வாண்டின் மாரி காலத்தில் அதாவது வட கீழ் பருவப் பெயர்ச்சி காற்றுக் காலம் மற்றும் இரண்டாவது இடைப்பருவக் காலத்திலும் மிகக்குறைவான மழைவீழ்ச்சி அதாவது சராசரியை விட மிகக் குறைவான மழைவீழ்ச்சியே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதனால் காலநிலை மாற்றம் தொடர்பாகவும் குறிப்பாக நீர் பாதுகாப்புத் தொடர்பாகவும் நாம் அதிக அளவு விழிப்புணர்வு கொள்வது அவசியமாகும். எங்களுடைய பிரதேசங்களின் இருப்பிற்கான மிகப்பெரிய இயற்கை ஆதாரமாக நீரே காணப்படுகின்றது. நீர் பற்றாக்குறை தொடர்ச்சியாக நிலவினால் எமது பிரதேச பொருளாதார நடவடிக்கைகள் முழுமையாகப் பாதிக்கப்படும். குறிப்பாக விவசாயத்துறை கடுமையாகப் பாதிக்கப்படும். இதனால் தானியப் பற்றாக்குறை ஏற்பட்டு கடுமையான நெருக்கடி நிலை ஏற்படக்கூடும்.

### ஓசோன்படைப் பாதிப்பைக் குறைத்தல்

எனவே ஓசோன் படையைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.

1. ஓசோன் படையைப் பாதிக்கின்ற வாயுக்களின் நுகர்வை நாம் தடுத்தல் வேண்டும். அந்த அடிப்படையில் குளோரோ புளோரோகாபன்(Chlorofluorocarbons) கலோஜெனேட்டட் ஹைட்ரோ கார்பன் (Halogenated hydro carbon) மேதையில் புரோமாயிட்(Methyl bromide) நைட்ரஜன் ஒக்சைட் (Nitrogen Oxide) போன்ற வாயுக்களின் பயன்பாட்டைக் குறைப்பதன் ஊடாக ஓசோன் படையைப் பாதுகாக்கலாம்.
2. தனிப்பட்ட வாகனங்களின் பயன்பாடுகளைக் குறைத்து பொதுவான வாகனப் பயன்பாடுகளை ஊக்குவிக்கின்ற அதேவேளை நகரப் பகுதிகளில் துவிச்சக்கர வண்டிகளின் பாவனையை ஊக்குவித்தலும் ஆதரவளித்தலும் வேண்டும்.
3. சூழலுக்கும் பூமியின் மேற்பரப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற சுத்தப்படுத்தும் பொருள்களை (Cleaning Products) பாவிக்காதிருத்தல். அந்த அடிப்படையில் பெரும்பாலான சுத்தப்படுத்தும் பொருள்கள் ஓசோன் படையைப் பாதிக்கின்ற மூலப் பொருள்களை உள்ளடக்கியிருப்பதனால் அவற்றைத் தவிர்ப்பது சிறந்தது. அவற்றைப் பயன்படுத்தாது இருப்பதன் ஊடாகப் பூமியினுடைய பாதுகாப்பு மண்டலமாக இருக்கின்ற ஓசோன் படையைப் பாதுகாக்க முடியும்.
4. உள்ளூர் பொருள்களை நுகர்தலும் அவற்றை ஊக்குவித்தலும் மிகத் தூர தேசங்களில் இருந்து எமக்குத் தேவையான பொருள்களை நாம் பெற்று பயன்படுத்துகின்ற பொழுது அந்தப் பொருள்களின் பாதுகாப்பிற்காகவும் அந்த பொருள்களின் கொண்டு செல்லலுக்காகவும் பயன்படுத்தப்படுகின்ற நைதரசன் ஒக்சைட்டின் மூலமாக ஓசோன் மண்டலம் பாதிக்கப்படுகின்றது. எனவே இறக்குமதி செய்யப்பட்ட குறிப்பாக நீண்ட தூரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் பயன்பாட்டைக் குறைப்பதன் ஊடாக ஓசோன் படைப் பாதுகாப்பிற்கு உதவ முடியும்.
5. குளிரூட்டிகள் குளிராக்கிகளின் பயன்பாட்டை இயலுமான அளவில் குறைத்துக் கொள்ளுதல் மனிதர்கள் தங்களுடைய சௌகரியத்திற்காகவும் தங்களுடைய தேவைக்காகவும் குளிரூட்டிகளையும் குளிராக்கிகளையும் பயன்படுத்துகின்றார்கள். அந்த அடிப்படையில் மனிதர்கள் பயன்படுத்துகின்ற குளிர்சாதனப் பெட்டிகளிலும்பயன்படுத்தப்படுகின்றகுளோரோ புளோரோகாபன் மற்றும் ஹைட்ரோ கார்பன் போன்ற மூலப் பொருள்கள் என்பதினால் அவற்றின் பயன்பாட்டை இயலுமான அளவு குறைப்பதனூடாக நாம் ஓசோன் படையைப் பாதுகாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 • 09 • 1940



மறைவு 17 • 08 • 2023

கடந்த (17.08.2023) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சிதம்பரப்பிள்ளை செல்வராசா
(ஓய்வுபெற்ற கட்டட படவரைஞர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.09.2023) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் ஆறுதல் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்**

கேசரி வீதி,
தையிட்டி, காங்கேசன்துறை.

குடும்பத்தினர்

(cs.52110) (N.1)

# 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 • 04 • 1938



உதிர்வு 11 • 09 • 2018

## திருமதி பொன்னையா தெய்வானை
திதி: பூர்வபக்க துதியை (16.09.2023)

### அரை தசாப்த நினைவலைகள்

பரிவின் பிறப்பிடமாக பண்பின் சிகரமாக
பாசத்தின் ஊற்றிடமாக பக்குவத்தின் உறைவிடமாக
பரிசுத்த ஆத்மாவின் வதிவிடமாக
பகுத்தறிவின் தோற்றிடமாக பாரிக்கு நிகர் வள்ளல் பெருந்தகையாக
பார் போல் பொறுமையின் பொக்கிசமாக
மொத்தத்தில் நமக்கெல்லாம் பேரன்னையாக
எமக்காகவே வாழ்ந்து மறைந்து அரை தசாப்தம் தொலைந்ததுவே
விழிநீர் கடலாக நமக்கு.

குடும்பத்தினர்

திருப்பதி கிழவ. தோட்டம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

M-1/7, Anderson Flats,
Park Road, Colombo - 05

(Cr40574) (N.1)

# முக்கிய அறிவித்தல்

## அடகு நகை விற்பனை அறிவித்தல்
## ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி

**01.05.2022** ஆம் திகதி தொடக்கம் **30.09.2022** ஆம் திகதி வரை அடகு வைத்த நகைகளை **20.10.2023** ஆம் திகதிக் கிடையில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும், தவறின் **20.10.2023** ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டு விடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

**இல. 31C ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (சந்தைக்கு அருகில்)
021 221 7287, 076 636 1238**

(CS 52104) (N.1)

## விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் மென்பொறியியல் இளமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம்.

(ச)

# பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

**குடியியல் நடைமுறைக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல்**

1. அழகேஸ்வராசா ரமணராசா
2. சிவசாமி மயூரன்
3. சிவகுரு இராமேஸ்வரன்

மூவரும்
நிர்வாகசபை.
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்.
ஆதிமூல லக்ஷ்மி நாராயண
அமுதசுரபி. (கற்கோவள ஈசானமடம்)
வடமராட்சி வடக்கு.
பருத்தித்துறை.

\- வழக்காளிகள்

வழ.இல. :- நானாவிதம் /1628/2023
நடபடிமுறை :- கிரமம்
பெறுமதி :- ரூபா 3,000,000/=
தன்மை :- நானாவிதம்

எதிர்

1. ஜெயக்கொடி ஜெயகாந்தன்
கற்கோவளம், பருத்தித்துறை.
2. தங்கவடிவேல் சுதன்
கற்கோவளம், பருத்தித்துறை.
3. சின்னக்கறுப்பன் சிவகுமார்
கற்கோவளம், பருத்தித்துறை.

\- எதிராளிகள்

ஆதிமூல லக்ஷ்மி நாராயண அமுதசுரபி அன்னதான மடம் -கூட்டிணைக்கப்படாத அமைப்பின் அங்கத்தவர்களுக்கு.

மேற்குறித்த வழக்கானது பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளிகளால் மேலே பெயர் குறிப்பிடப் பட்டிருக்கும் எதிராளிகளுக்கு எதிராக பின்வரும் நிவாரணங்களை வேண்டித் தாக்கல் செய்யப்பட்டுள்ளது:

i. எதிராளிகள் குறித்த அன்னதான மடத்தின் நிர்வாக சபைக்கு தெரிவு செய்யப்பட்ட திகதியான 21.03.2019 இலிருந்து தற்போதைய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்ட திகதியான 03.12.2021 வரையான காலப்பகுதிக்கான முறையான ஆய்வுசெய்யப்பட்ட கணக்கறிக்கையினை சமார்ப்பிக்க வேண்டும் என்ற கட்டளையும் தீர்ப்பும்.

ii. எதிராளிகள் தற்போதைய நிர்வாக சபையினரான வழக்காளிகளிடம் ஒப்படைப்பதாக வாக்குறுதி யளித்த ரூபா 1,000,000/= பணம் மற்றும் ஒலிபெருக்கி மற்றும் அதனோடு இணைந்த சாதனங்கள் என்பவற்றை வழக்காளிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கட்டளையும் தீர்ப்பும்.

iii. குறித்த அன்னாதான மடத்தின் கட்டுமானப் பணிகளிற்காக 3ம் எதிராளியின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு வைப்பிலிடப்பட்ட ரூபா நான்கு இலட்சத்து முப்பதாயிரம் நிதி தொடர்பில் உரிய கணக்கறிக் கையினை சமர்ப்பிக்கவேண்டும் என்ற கட்டளையும் தீர்ப்பும்.

iv. குறித்த எதிராளிகளின் நிர்வாக சபைக் காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட 200 மூடை அரிசியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி தொடர்பான முறையான கணக்கறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற கட்டளையும் தீர்ப்பும்.

v. குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 16ம் பிரிவின் கீழ் இவ் வழக்கு தொடர்பான அறிவித்தலை பத்திரிக்கையில் அல்லது கௌரவ மன்று கட்டளையிடும் பிரகாரம் பிரசுரிப்பதற்கான கட்டளையும்.

vi. வழக்குச் செலவும் மன்று தகுந்ததெனக் கருதும் ஏனைய தக்க நிவாரணங்களும்.

இவ்வழக்கானது 2023.09.20 திகதியன்று திறந்த மன்றில் அழைக்கப்பட இருக்கின்றதென்றும், ஆதிமூல லக்ஷ்மி நாராயண அமுதசுரபி அன்னதான மடம் - கூட்டிணைக்கப் படாத அமைப்பின்அங்கத்தவர்கள் எவராவது இவ்வழக்கில் அக்கறையுடையவராக இருப்பின் 2023.09.20ம் திகதியன்று காலை 09.00 மணிக்கு தனிப்பட்ட ரீதியில் அல்லது சட்டத்தரணியுடாக கௌரவ மன்றில் தோன்றலாம் எனவும் இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**2023ம் ஆண்டு ஆவணி மாதம் 11 ம் திகதி**

மன்றின் கட்டளைப்படி,

வழக்காளிகளின் பதிவுபெற்ற சட்டத்தரணி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.

(cs.52114) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டரங்கம் திறப்பு



ஸ்ரீ குமரகுருபரன் சனசமூக நிலையத்தின் கனடாக்கிளையின் நிதிப் பங்களிப்பில் கந்தர் ஐயாத்துரை மற்றும் ஐயாத்துரை அன்னப்பிள்ளை ஆகியோரின் ஞாபகார்த்தமாக புத்தூர் ஸ்ரீ குமரகுருபரன் சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்ட விளையாட்டரங்கம் கடந்த 9ஆம் திகதி புதன்கிழமை சன சமூகநிலையத்தினர் மற்றும் விளையாட்டுக் கழகத்தின ரிடம் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து கலை நிகழ்வுகள் மைதான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

(ய)




## கற்றல் உபகரணம் வழங்கல்

வவுனியா மாவட்டத்திலுள்ள கந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள வாணி வித்தியாலய பாடசாலை மாணவர்கள் 60 பேருக்கு இணைந்த கரங்கள் உற வுகளின் நிதிப்பங்களிப்பில் கடந்த 10ஆம் திகதி வியாழக்கிழமை கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள் மற்றும் காலணிகள் என்பன வழங் கப்பட்டன.

(ய)



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை தினமான 'மகா வித்தி யன்ஸ்' தினம் ஒன்றுபடுவோம் ஒன்றாய் எழுவோம் என்ற தொ னிப்பொருளில் நடை பவனி அண்மையில் இடம்பெற்றது.

(ய-110)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பொருளாதா ரம் நலிவுற்ற தெரிவு செய்யப்பட்ட கிளிநொச்சி செஞ்சோலை மாதிரிக் கிராமத்தில் வசிக்கின்ற 24 குடும்பங்களுக்கும் முல் லைத்தீவு தேறாங்கண்டல் கிராமத்தில் வசிக்கின்ற 110 குடும் பங்களுக்கும் கடந்த 12ஆம் திகதி சனிக்கிழமை உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

(ய-27)


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை பதவி வெற்றிடம் - காசாளர் தரம் 306/13

சம்பள அளவுத்திட்டம் :-18360-27160x10-170x10-21660
(கூ.வே.ஆணைக்குழு சுற்றறிக்கை 2/2022 ற்கு அமைய ஏனைய படிகள் வழங்கப்படும்)

கல்வித்தகைமை :

அ. கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 0 2 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தி

- வயதெல்லை 18-45 வரை
- கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது
- தெரிவு செய்யப்படுபவர்கள் சபையில் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- விண்ணப்பத்துடன் சகல சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்பட வேண்டும்.
- நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் நிறுவனத்தினூடாக நிறுவன தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

◆ விண்ணப்ப முடிவுத்திகதி : - 30.09.2023

◆ விண்ணப்பிக்க வேண்டிய முகவரி : -
செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை, வீரசிங்கம் மண்டப கட்டடத்தொகுதி 2ம்மாடி, இல. 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோர் விண்ணப்ப படிவத்தை சபையின் கடமை நேரத்தில் ரூபா 20.00 செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும்.
தபால் உறையில் மேற்புறத்தில் "காசாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும்.


செயலாளர்
யா.மா.கூ.சபை. (ஏ.40575) (N.1) 15.09.2023


## ஆலயங்களில் திருட்டு: இருவருக்கு மறியல்

யாழ், ஒக. 16
சுழிபுரம் காட் டுப்புலம் காளி கோவில் மற்றும் ஐயனார் ஆலயம் என்பனவற்றில் திருட்டில் ஈடு பட்ட இருவரை ஏழு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மல் லாகம் நீதிவான் நீதிமன்று நேற்று முன்தினம் உத்தர விட்டது.

(அ-ம-125)

## மரண அறிவித்தல்



### செல்வன் சுமந்திரன் அபிஷனன்

(யா/அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன்)

பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுமந்திரன் அபிஷனன் அவர்கள் நேற்று (15.09.2023) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்ட சுமந்திரன் - ரவீந்திரகுமாரி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், சுமந்திரன் ஆர்த்திகன் அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சாவ கச்சேரியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் மற்றும் ரதிமலர் மற்றும் இரத்தினதுரை யோகராணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 639 2248

(CS 26216) A-1

## ஆண்டுகள் பதினேழு

### அமரர் சுப்பிரமணியம் பசுபதி

திதி: துதியை (16.09.2023) சனிக்கிழமை



தோற்றம் 29.11.1935 மறைவு 26.08.2006


ஆண்டுகள் பதினேழு ஆனதுவோ
அப்பா!
நீங்கள் அருகிருந்தெம்
மனம் நிறைந்த
ஆதரவுக்கேங்குகின்றோம்!
வழிகாட்டும் ஒளியாய் -
எம் விழியாய்
உங்கள் வார்த்தைகள்
எம்மோடு என்றும் வாழும்
வணங்குகின்றோம்.

குடும்பத்தினர்.
'பசுபதீயம்'
கலாசாலை வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

தோற்றம் 27 . 10 . 1948



மறைவு 29 . 08 . 2022

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 29.08.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சின்னத்துரை மகிமைசேனன்

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (16.09.2023) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இனுவில் மேற்கு, இனுவில்.
T.P:077 075 9493

குடும்பத்தினர்.

(CR 40560) A-1

### பொலிஸ்...

பின்போது காணாமற்போன பொலிஸ் அலுவலர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த சதுரங்க (வயது-28) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்த அலுவலர் காணாமற்போயிருந்தார். இதையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு அந்தப் பகுதியில் தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையிலேயே குளமொன்றில் இருந்து அந்தப் பொலிஸ் அலுவலர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-214.113.26)


**வேலை ஆள் தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரதான வீதியில் உணவகம் நடாத்தத் தெரிந்த / பங்குதாரராக வேலைக்கு ஆள் தேவை. **077 330 7073**

**மணமகள் தேவை**

1985 ஆம் ஆண்டு பிறந்த கனடா பிரஜாவுரிமையுடைய விவாகரத்துப்பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

**074 328 6189**

(cs 52056) (N.1)


### யாசகி...

தப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வவுனியா, செட்டிகுளத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் திருவிழாக்காலத்தில் தங்கிநின்று தனது இரண்டரை வயதுக் குழந்தையுடன் யாசகம் எடுத்துவந்துள்ளார். இதன்போது பிறிதொரு யாசகியுடன் அவருக்குப் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தனக்குப் பழக்கமான யாசகியிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு உணவுண்பதற்குச் சென்றுள்ளார். திரும்பிவந்து பார்த்தபோது குழந்தையைப் பொறுப்பேற்ற யாசகியையும், குழந்தையையும் காணவில்லை. இந்த நிலையில் இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## பெயர்மாற்றம்

தாழங்குழி மத்தொனி கரவெட்டி மேற்கு, கரவெட்டியில் வசிக்கும் **செல்லப்பா சந்திரசேகரம்பிள்ளை** ஆகிய நான் எனது பெயரை **செல்லப்பா சந்திரசேகரம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **செல்லப்பா சந்திரசேகரம்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(cs26195) (N.1)

செல்லப்பா சந்திரசேகரம்

# மரண அறிவித்தல்

தோற்றம் 1962 . 05 . 05



மறைவு 2023 . 09 . 15

## திரு.கதிரவேலு அரியரட்ணம் (காஸ் பார்ட்டி)

கருங்காலி காரைநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிரவேலு அரியரட்ணம் அவர்கள் கடந்த (15.09.2023) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு சரஸ்வதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இலட்சுமணப்பிள்ளை பூமணி, காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சிவஞானவல்லி மற்றும் சாந்தரூபி அவர்களின் அன்புக் கணவரும் பிரசாந்தன் (ஓம்சக்தி டிரான்ஸ்போர்ட்), துளசி, நிசாந்தன், பிரதீபன், நிரோசன், கஜரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வவித்திரா, தனுஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் கணேசபிள்ளை, சறோஜிதேவி, சண்முகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜினோஷ், ஜினோஜன், அனிஸ்டன், மேநந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் .


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலகிரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தொடர்பு: 0777 82741**

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 02 . 1928



மறைவு 15 . 09 . 2023

## விநாசித்தம்பி இராசையா

மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும் அல்லாரை வடக்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி இராசையா அவர்கள் கடந்த (15.09.2023) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மூத்த மகனும் காலஞ்சென்ற கேசகர் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக்கணவரும் நாகேஸ்வரி, நாகேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, நாகம்மா, நடேசபிள்ளை, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சிவானந்தம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - பிரதேச செயலகம் கோப்பாய்), கலாகுமாரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தபிரா (ஆசிரியை - புதுக்குடியிருப்பு R.C), தயூரா (ஆசிரியை - திருவையாறு M.V), ஆரணி (கனடா), நீரஜா (கனடா), தர்சன் (Bank of Ceylon) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.30 மணியளவில் பாலாவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

தகவல் : குடும்பத்தினர்.
077 7110 160, 077 3030 240

(CR 40579) M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு.கனகரட்ணம் வீதியில் கொட்டப்படுகின்றன கழிவுகள்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 16

வட்டுக்கோட்டை, கனகரட்ணம் வீதியின் இருமருங்கிலும் முட்பற்றைகள் அடர்ந்து வளர்ந்து பயணிக்க முடியாது காணப்படுகின்றன. அத்துடன் வீதியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் பயணிக்க முடியாது சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் வலி.மேற்கு பிரதேசசபைக்கு அந்தப் பகுதி மக்கள் இணைந்து அனுப்பி வைத்த கடிதத்தில் உள்ளதாவது:-

வட்டுக்கோட்டை, கனகரட்ணம் வீதி மக்கள் அதிகளவில் பயன்படுத்துகின்ற வீதியாகும். இந்த வீதியின் இருமருங்கிலும் முட்பற்றைகள் அடர்ந்து வளர்ந்து காணப்படுகின்றன. அதன்காரணமாக வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் வழிப்பறிச் சம்பவங்களுக்கு அஞ்சியே பயணிக்க நேரிடுகிறது.

அத்துடன் வீதியின் இருமருங்கிலும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொலித்தீன், விலங்குக் கழிவுகள் உள்ளிட்ட கழிவுகளை இனந்தெரியாதோர் கொட்டிவிட்டுச் செல்கின்றனர்.

இதனால் வீதியால் துர்நாற்றத்துக்கு மத்தியிலேயே பயணிக்க வேண்டிய அசௌகரிய நிலை தோன்றியுள்ளது.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திலெடுத்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ச)

### குருதிக்கொடை முகாம்

முல்லை., செப். 16

முல்லைத்தீவு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 17ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு முல்லைத் தீவில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் பொதுமக்கள் என 100 க்கும் மேற்பட்டோர் குருதிக்கொடையை வழங்கியுள்ளனர். (ஒ-ரி3-113)



# வடமாகாண எறிபந்துப் போட்டியில் யாழ்.இராமநாதன் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 16

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கான எறிபந்துப் போட்டிகள் கடந்த மாதம் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் யாழ். இராமநாதன் கல்லூரியின் 17 வயது எறிபந்து அணி, மாகாணச் சம்பியனானது. (ஒ-ரி3-125)





வட்டுக்கோட்டை- மூளாய் வீதி பல வருடங்களாகத் திருத்தம் செய்யப்படாது மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டுவந்த நிலையில், தற்போது இந்த வீதியின் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச)

# துவிச்சக்கர வண்டிப் பயணம்; வவுனியாவில் வரவேற்பு

வவுனியா, செப். 16

போதைப் பொருள் ஒழிப்பு உள்ளிட்ட 3 விடயங்களை முன்னிறுத்தி நாடு பூராகவும் துவிச்சக்கர வண்டிப் பயணத்தை மேற்கொண்டுள்ள இளைஞனுக்கு வவுனியாவில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் "போதைப்பொருள் ஒழிப்பு, கவனமாக வாகனத்தைச் செலுத்துங்கள், வெளிநாட்டுப் பயணிகளே வாருங்கள்" எனும் 3 எண்ணக்கருக்களை வலியுறுத்தி நாடு முழுவதும் துவிச்சக்கர வண்டியில் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

வவுனியாவை வந்தடைந்த இளைஞனுக்கு அப்பகுதியைச் சேர்ந்த பள்ளிவாசல்கள் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகப் பிரதிநிதிகள் தமது ஆதரவை வழங்கியுள்ளனர். (ஒ-ரி3-18)




# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 04 . 1940

மறைவு 15 . 09 . 2023



## திரு . ஆறுமுகம் வேலாயுதம்

(மனேச்சர் ஒலுமடு )

யாமாலை சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் ஒலுமடு மற்றும் தொல்புரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு . ஆறுமுகம் வேலாயுதம் அவர்கள் நேற்று (15.09.2023) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் நமசிவாயம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் செல்லத்துரை இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தினி (யேர்மன்), ஜெயசுதன் (இலண்டன்), சுகந்தினி (அமெரிக்கா), ஜெயவிஜிதன் (பொறியியலாளர் - அமெரிக்கா), ஜெயகாந்தன், ஜெயடினேஸ் (வைத்தியக்கலாநிதி - அவுஸ்ரேலியா), நிஷாந் (ஆசிரியர் - கிளி/கண்ணகையம்மன் வித்தியாலயம்), டிசெந்தன் (இலண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் கணேசமூர்த்தி (யேர்மனி), சாமினி (இலண்டன்), சின்னையா (பொறியியலாளர் - அமெரிக்கா), சுபாஜினி (அமெரிக்கா), ஸ்ரீரதி (நீர்ப்பாசனத் திணைக்களம் - வடமாகாணம்), சிந்தியா (அவுஸ்ரேலியா), போஜினி (தேசிய சேமிப்பு வங்கி - சங்கானை), பிரியங்கா (லண்டன்) ஆகியோரின் பிரியமான மாமனாரும் கஜனி குவைத், மிதுஷா கோவர்த்தன், லக்ஷனா, திவியா, பிரவின், ஜெருஷா, சிவன், குகன், கணன், அபிஷா, ஆரியா, யுதாஜித், ஆதித், தியா, ஆராதியா, ஹரிஜித், சேருஷாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 17.09.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விக்ரோறியா கல்லூரி ஒழுங்கை,
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

தகவல் : குடும்பத்தினர்.
021 225 0511 , 077 9947 442 , 077487 1176


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.எப்., ஈ.ரி.எப். க்கு பாதிப்பு இல்லை

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, செப். 16

ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் தற்போது கிடைக்கும் நலன்கள் தொடர்ந்தும் கிடைக்கும். இந்த நிதி இருப்புகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக அமையத்தில் நேற்று அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின் படியும் மற்றும் கடன் வழங்குநர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், தற்போது வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பணிகள் தயார்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புடன், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நாம் வெளிநாட்டுக் கடன்களாகப் பெற்றிருப்பது, அந்தந்த நாடுகளின் மக்களின் வரிப்பணம் என்பதுதான், நாம் அது குறித்து கவனம் செலுத்த வேண்டும். அதனால், வெளிநாட்டுக் கடனை செலுத்த முடியாத நிலையில் உள்ள நாடு என்ற வகையில், உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்காமல், வெளிநாட்டுக் கடன்களை மாத்திரம் மறுசீரமைக்க இடமளிக்குமாறு கோரிக்கை விடுக்க எமக்கு வாய்ப்பில்லை. எனவே, உள்நாட்டுக் கடனை மறுசீமைப்பதும் கட்டாயம் ஆகும்.

நாம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் மூலமாகவே அதிகளவில் உள்நாட்டுக் கடன்களைப் பெற்றுள்ளோம். அதனாலேயே, இது குறித்து விவாதம் ஏற்பட்டுள்ளது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஏன் வங்கிகளில் முன்னெடுக்கவில்லை? என்று சிலர் கேட்கிறார்கள். அதற்கு நாம் கூறக்கூடிய தெளிவான பதில் இதுதான், வங்கிகளுக்கு தொடர்ந்தும் சுமார் 30 சதவீத அளவில் வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக வங்கிகளுக்கு இன்னும் சுமைகளை வழங்குவதன் மூலம் வங்கிகளில் கொடுக்கல்வாங்கல் செய்யும் பொதுமக்களே பொருளாதார ரீதியாக மேலும் பாதிக்கப்படுவார்கள்.

அதற்கிணங்க, அரசாங்கம் என்ற வகையில் நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று, எதிர்வரும் காலத்துக்கு இந்த உள்நாட்டுக் கடன் மறுசீமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவோம். ஊழியர் சேமலாப நிதியம் உரித்தாகும் மத்திய வங்கி, ஒரு சுயாதீனமான நிறுவனமாக இருப்பதால், அதற்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்பதை நம்பிக்கையுடன் கூறுகின்றேன். தொழில் அமைச்சின் ஊடாக இந்த நிதியம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படமாட்டாது என்பதையும் நாம் பொறுப்புடன் தெரிவிக்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

## மனிதப்...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் ஒன்பதாம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்டன. நேற்று மூன்று என்புத்தொகுதிகள் முற்றாக அகழப்பட்ட நிலையில் இதுவரை அந்தப் புதைகுழியில் இருந்து 17 என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், விடுதலைப் புலிகள் பயன்படுத்திய இலக்கத்தகடுகள், பச்சைநிற உடைகள் மற்றும் துப்பாக்கி ரவைகள், சயனைட் குப்பிகள் என்பனவும் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. இதனால் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி சர்வதேச கவனத்தைப் பெற்றிருந்த நிலையில், தற்போது தற்காலிகமாக அகழ்வுப் பணி இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் ஒன்பதாம் நாள் அகழ்வாய்வில், மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றோடு சேர்த்து மொத்தமாக 17 எலும்புக்கூட்டுத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. அகழ்வில் ஈடுபட்டு கொண்டிருக்கும் பேராசிரியர் ராஜ்சோமதேவ குழுவினர் அவர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பணிகளுக்குச் செல்லவுள்ளனர். இதனால், அகழ்வுப் பணிகள் தற்காலிகமாகக் கைவிடப்படுகின்றன. எனினும் இன்னும் ஓரிரு வாரங்களில் அதாவது ஒக்ரோபர் இடைப்பகுதியில் இதே குழுவினரால் அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் - என்றார். (அ-ம-19,26)

## புதைகுழியின்...

தாவது:-

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் கடந்த ஒன்பது நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், 17 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், இன்னும் பல மனித எலும்புக்கூடுகள் அங்கே இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்த நிலையில் ஒன்பது நாள்கள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றதையடுத்து, குறித்த அகழ்வாய்வுப் பணிகள் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த மனிதப் புதைகுழி முற்றுமுழுதாக அகழ்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன், இந்த மனிதப் புதைகுழி தொடர்பான உண்மைத் தன்மை வெளிவர வேண்டும் என்பதே எமது நிலைப்பாடகவிருக்கின்றது. அத்தோடு சர்வதேச நாடுகள் இந்த மனிதப் புதைகுழி தொடர்பான விடயத்தில் தலையிட்டு, இந்த மனிதப் புதைகுழி விவகாரத்தில் இலங்கை அரசின் பொறுப்புக் கூறலுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும்.

இறுதிக்கட்டப் போர் இடம்பெற்றபோது இராணுவத்திடம் சரணடைந்து, தற்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களாகத் தேடப்படுபவர்கள், குறித்த கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என இரா-

குள்ள பலருக்கும் சந்தேகங்கள் இருக்கின்றன. இப்படியான சூழலில் இங்கு அகழ்வாய்வு மேற்கொள்பவர்களை நாம் நம்புகின்றோம். அவர்கள் தம் பணியை இதயசுத்தியுடன் மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-26)

## பிள்ளையானிடமுள்ள...

என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

ஜே.வி.பி.யின் முக்கியஸ்தரான கலாநிதி நளின் ஜயதிஸ்ஸ இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்தஞாயிறு தினத்தன்று திட்டமிட்ட அடிப்படையில் ஒரு மணிநேரத்துக்குள் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனினும், விசாரணைகள் சரியான திசையில் செல்லவில்லை. அப்போது பிரதமராக இருந்தவர் தற்போது ஜனாதிபதியாக உள்ளார். எனவே, இனியும் விசாரணை முறையாக நடக்குமா எனத் தெரியவில்லை.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இதுவரை முன்னெடுத்த விசாரணைகளை அடிப்படையாகக்கொண்டு சுயாதீன விசாரணையொன்று இடம்பெற வேண்டுமெனில் முக்கியமான இரு விடயங்கள் இடம்பெறவேண்டும். ரணில் ஆட்சியில் இராஜாங்க அமைச்சராக உள்ள பிள்ளையான்மீது குற்றச்சாட்டு உள்ளது. எனவே, அவர் பதவி நீக்கப்பட வேண்டும். அத்துடன் அரச புலனாய்வுப் பிரிவு பிரதானியாக உள்ள சுரேஷ் ஷாலேயும் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட வேண்டும்' - என்றார். (அ-ம-44)

## இலங்கைக்கு...

படும் பிரேரணைகளின்போது இலங்கைக்கு ஆதரவாகவே கியூபா செயற்படும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

கியூபாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், கியூபா ஜனாதிபதி மி குவல் டியாஸ்கனெல் பெர்முடெஸுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று நடைபெற்றது.

கியூபாவில் உள்ள 'புரட்சியின் அரண்மனைக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கியூபா ஜனாதிபதி வரவேற்றதுடன், இலங்கை ஜனாதிபதிக்கு இராணுவ மரியாதையும் அளிக்கப்பட்டது. சுமுகமான உரையாடலுக்குப் பிறகு இரு தலைவர்களும் இருதரப்பு பேச்சில் இணைந்துகொண்டனர். கியூபாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை ஜனாதிபதியை கௌரவத்துடன் வரவேற்பதாகக் குறிப்பிட்ட கியூபா ஜனாதிபதி, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவின் பெறுமதி பற்றியும் நினைவு கூர்ந்தார்.

கடந்த காலங்களில் இலங்கைக்கும் கியூபாவுக்கும் இடையிலான பலமான சர்வதேச ஒத்துழைப்பை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கியூபாவுக்கு எதிரான தடைகளை நீக்குமாறு கோரும் ஐ.நா தீர்மானத்துக்கு இலங்கை எப்போதும் ஆதரவளித்து வருவதாகவும், மனித உரிமைகள் தொடர்பில் கியூபா பலதரப்பு தளங்களில் இலங்கைக்கு ஆதரவளித்ததையும் நினைவு கூர்ந்தார்.

எதிர்காலத்தில், சுகாதாரம், விவசாயம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். சர்வதேச விவகாரங்களில் கியூபாவுக்கு இலங்கை ஆதரவளிக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதோடு, மனித உரிமை தொடர்பான பிரேரணைகளில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக கியூபா ஜனாதிபதி உறுதியளித்தார். மேலும், அடுத்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை கியூபா ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். (அ-ம-44)

## திலீபனின்...

வேந்தல் நிகழ்வு தமிழர் தாயகத்தில் நேற்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது.

**நல்லூர் நினைவிடத்தில்**

திலீபன் தனது அஹிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்த இடத்திலும் நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டன. முன்னாள் போராளியொருவர் பொதுச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பலநூறு பொதுமக்கள் தன்னுணர்வுடன் இதில் கலந்துகொண்டனர்.

**கிளிநொச்சியில்**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் அக்கராயன் அம்பலப்பெருமாள் சந்தியில் கொட்டகை அமைக்கப்பட்டு திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் சுந்தரமூர்த்தி தயாபரன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பிரதேசசபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், அக்கராயன், ஸ்கந்தபுரம் பிரதேச சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

**யாழ். பல்கலையில்**

திலீபன் கல்விகற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பலநூறு மாணவர்கள் கலந்துகொண்டு தியாக தீபத்துக்கு தமது அஞ்சலியைக் காணிக்கையாக்கினார்கள். (அ-ச-113,125,27,20)

## இந்தியத்...

செயற்பட்டுவரும் கோபால் பாக்லேயின் பதவிக்காலம் முடிவடைகின்ற நிலையில் அவரின் இடத்துக்கே சந்தோஷ் ஜா நியமிக்கப்பட்டுள்ளார். பாக்லே அவுஸ்திரேலியாவுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ-ம)

## கருப்பணிச்சான்...

என்று போராட்டத்தில் ஈடுபட்ட சிங்கள மக்கள் தெரிவித்தனர். எனினும் அவ்வாறு எந்த மயானமும் அவர்கள் குறிப்பிடும் இடத்தில் இல்லை. அது காலம் காலமாக எங்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகவே இருந்து வந்திருக்கின்றது என்று தனியார் காணியின் உரிமையாளர் தெரிவித்தார்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா பிரதேச செயலரும், பொலிஸாரும் இரு தரப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். நில அளவை செய்து அந்தப் பகுதியை சிங்கள மக்களுக்குரியதாக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பிக்கு, பொலிஸாரிடமும் பிரதேச செயலரிடமும் கேட்டுக்கொண்டார். எனினும் தமிழ் மக்களின் எதிர்ப்பையடுத்து அளவீட்டுப் பணிகள் கைவிடப்பட்டன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராயப்பர் வீதிக்கு வந்த நிதி மாற்றமா?

வீதி புனரமைப்புக்காக மக்களின் கோரிக்கைக்கு அமைவாக ஒதுக்கப்பட்ட நிதியை சாவகச்சேரி பிரதேசசபையினர் வேறு வீதி புனரமைப்புக்குப் பயன்படுத்த முற்பட்டுள்ளமை குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

கொடிகாமம் கச்சாய் வீதியில் இராயப்பர் வீதியைப் பயன்படுத்தும் மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான மக்கள் கையொப்பமிட்டு இவ்வீதியைப் புனரமைத்து வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதன்பிரகாரம் 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படிருந்தது. இந்த நிதியில் தற்போது அயலில் உள்ள வேறொரு வீதிக்கு சபையின் முன்னாள் உறுப்பினரின் ஏற்பாட்டில் புனரமைப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மணல் வீதியாகக் காணப்படும் இராயப்பர் வீதியை தார் வீதியாக புனரமைக்க மக்கள் விடுத்த வேண்டுகோளை பிரதேச சபையினர் நிராகரித்து அந்த நிதியினை வேறு வீதிக்குப் பயன்படுத்துவது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

நீண்டகாலமாக மணல் வீதியாக காணப்படும் இராயப்பர் வீதியிலிருந்து மருதடிப் பிள்ளையார் கோவில் வீதி வரையான வீதி புனரமைக்க ஒதுக்கிய நிதியினை வெள்ளாம்போக்கட்டி அல்லாரை வீதியின் மிகுதி வேலைக்குப் பயன்படுத்த முற்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளனர். (ஒ-ரி-29)


## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளுக்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1kg | வெள்ளை சீனி | -259/= | (Max 2kg) |
| 1kg | சிவத்த பருப்பு | -298/= | (Max 2kg) |
| 1kg | மஞ்சள் பருப்பு | -432/= | (Max 2kg) |
| 1kg | Prima கோதுமை மா | - 196/= | |
| 1kg | கோதுமை மா | - 183/= | |
| 1kg | றவை | - 288/= | |
| 1kg | தீட்டல் | - 192/= | |
| 400g | அங்கர் பால்மா | - 1040/= | 1080/= |
| 400g | அன்லீன் பால்மா | - 1250/= | 1350/= |
| 01 | அங்கர் யோகட் | - 50/= | 80/= |
| 330g | கோல்ட்மாரி பிஸ்கட் | - 262/= | 330/= |
| 01 | சந்தூர் சவர்க்காரம் | - 140/= | 175/= |
| 1kg | சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | 430/= |

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

Happy Supermarket
0777 80 80 30
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.


## மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு 2016 எட்டிய இணக்கப்பாடே!

### யாழ். கடற்றொழில் சங்கங்கள் இந்தியப் பிரதமர் மோடிக்கு மனு

யாழ்ப்பாணம், செப். 16

இருநாட்டு தொப்புள்கொடி உறவுக்குத் தடையாக இருக்கும் அத்துமீறிய இழுவைமடித் தொழிலை இலங்கைக் கடற்பரப்பினுள் நிறுத்தி இருநாட்டு மீனவர்களுடன் ஒற்றுமையுடன் வாழ்வாதாரத்தை நடத்த 2016ஆம் ஆண்டு எட்டப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - இவ்வாறு யாழ்ப்பாண கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் மற்றும் சமாசங்கள் ஒன்றிணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மனுவொன்றை அனுப்பியுள்ளன.

இந்த மனு யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனிடம் கையளிக்கப்பட்டது.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையே இழுவைப் படகுகளால் கடல் வளமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் பிரச்சினை நீண்டகாலமாக தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

நீங்கள் பதவியேற்ற பின்பு 2016ஆம் ஆண்டு டில்லியில் இரு நாட்டின் வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் இராஜதந்திரப் பேச்சு இடம்பெற்று ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இதனை இரு நாட்டு மீனவ சமூகமும் ஏற்றுக்கொண்டது.

தற்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை அரசியலாக்கப்பட்டு உண்மையான மீனவப் பிரதிநிதிகளை ஓரம்கட்டும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. அதனால் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளும் மீளவும் பேசுபொருளாகியுள்ளன.

ஆகையால் 2016ஆம் ஆண்டு எட்டப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருநாட்டு தமிழ் மீனவர்களும் ஒற்றுமையுடனும், சகோதரத்துடனும் வாழ்வாதாரத்தை நடத்த ஆவன செய்யவேண்டும் - என்றுள்ளது. (ச-27)


## மீனவர்களுக்கு



இந்திய மீனவர்களின் நன்மதிப்பைப் பெற்ற
வெளி இணைப்பு இயந்திரம்
Greaves Outboard Motor நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்டு விசேட விலைக்கழிவுடன்
விற்பனை செய்யப்படுகின்றது.

ஆர்க் என்ரபிறைசஸ்

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, பரந்தன் சந்தி - 021 228 2020
- எழுதுமட்டுவாள் A9 வீதி, - 070 191 3571
- Hotline: 071 535 7799 / 071 973 9917

## ஆண் வேலையாள் தேவை

80 வயது ஆண் ஒருவரை பராமரிப்பதற்கு 45 - 55 வயதிற்கு இடைப்பட்ட பகுதிநேர ஆண் வேலையாள்கள் தேவை.

077 210 9860, 077 658 3202


(cs 52107) (N-1)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 781 3417


## மரண அறிவித்தல்



## முருகேசு செல்வரட்ணம்

யாழ். கொட்டடியை பிறப்பிடமாகவும், யாழ்.கந்தர்மடம், கொழும்பு, கனடா Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு செல்வரட்ணம் அவர்கள் 14.09.2023 வியாழக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு செல்வம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கோமலாம்பாள் அவர்களின் பாசமிகு கணவரும், கிரிதரன், கீதா ஆகியோரின் அன்புத் தந்தையும் மார்க்கண்டு பிரபாகரன் அவர்களின் அருமை மாமனாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (லண்டன்), கதிர்காமநாதன் (கனடா), நவரட்ணராஜா (லண்டன்), பஞ்சலிங்கம் (இலங்கை), ஸ்ரீரங்கேஸ்வரி (அவுஸ்திரேலியா), பத்மநாதன் (இலங்கை), கணேசநாதன் (லண்டன்), வரதராஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நடராசா, பரமசிவம்பிள்ளை (Lawyer), கௌரிநாயகி, கனகராஜா மற்றும் வாசுகி, ருக்குமணி . இராணி . ராஜேஸ்வரி . ராஜாராம் , காலஞ்சென்ற லோகினி, வதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும், துளசி, பிருந்தா , கௌதம் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மார்க்கம், கனடாவில் 16.09.2023 அன்று பார்வைக்காக வைக்கப்பட்டு 17.09.2023 அன்று ஈமக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மார்க்கம், கனடா.

தகவல் : குடும்பத்தினர்.
+1 905 604 4319

(CS 28226) M-1


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் **160 பரப்பு (நிலப்பரப்பு)** விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389

(CS 26222 A)A-1

## கொழும்பு விலையில்

### யாழ்ப்பாணத்தில் கோழி மலிவு விற்பனை

* 1 Kg சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி விலை 1250/-
* 1 Kg பேரன்ஸ் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1250/-
* கல்பேட் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1 Kg 1250/-
* விறாத்து கோழிக்குஞ்சுகள், சேவல், ஊர்கோழி

இவை அனைத்தும் வியாபாரிகளுக்கு, ஹோட்டல் தேவை படுபவர்களுக்கு விசேட விலை கழிவு உண்டு.

தொடர்பு: நியு சிற்றி பாம்
நியு சிற்றி கோழிக்கடை
இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர். யாழ்ப்பாணம்.

(CS 26214)A-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org